# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2024

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

**மாளிகாவத்தை, கொழும்பு -10**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024

**செலவினத் தலைப்பு இலக்கம்: 290**

சுசந்த கஹவத்த
பணிப்பாளர் நாயகம்
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்
**011-2472187**
**dgdfar@gmail.com**

## பொருளடக்கம்

பக்கம்

**அத்தியாயம் 01-நிறுவன விவரம் / செயற்பாட்டுச் சுருக்கம்**

1.1 அறிமுகம்
1.2 நிறுவனத்தின் நோக்கு,பணிக்கூற்று,குறிக்கோள்கள்
1.3 பிரதான பணிகள்
1.4 அமைப்பின் கட்டமைப்பு
1.5 அமைப்பு விளக்கப்படம்

**அத்தியாயம் 02-முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு**

**அத்தியாயம் 03- 2024 ஆம் ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை**

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை
3.2 நிதி நிலைமை பற்றிய அறிக்கை
3.3 பணப்பாய்வு பற்றிய அறிக்கை
3.4 நிதி அறிக்கைக் குறிப்புகள்
3.5 வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை
3.7 நி.ஒ.208 இன் பிரகாரம் வேறு அமைச்சுக்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு அளிக்கப்படும் ஏற்பாடுகள்
3.8 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை
3.9 கணக்காய்வாளரின் அறிக்கை

**அத்தியாயம் 04-செயற்றிறன் குறிகாட்டிகள்**

4.1 நிறுவனத்தின் செயற்றிறன் குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

**அத்தியாயம் 05-நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை**

5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்
5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் சாதனைகள் மற்றும் சவால்கள்

**அத்தியாயம் 06-மனித வள விவரம்**

6.1 பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம்
6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது உபரியின் தாக்கம்
6.3 மனித வள அபிவிருத்தி

**அத்தியாயம் 07-இணக்க அறிக்கை**

# அத்தியாயம் 01 – நிறுவன விவரம்

## 1.1. அறிமுகம்

கடற்றொழில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களமானது, 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடிக் கலன்) சட்டம்,1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துதல்,தற்கால நடைமுறைகள் மற்றும் சர்வதேச சமுத்திர சட்டம்,பிரமாணங்களுக்கு அமைவாக செய்ய வேண்டிய திருத்தங்கள் மற்றும் புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்வதன் மூலம் கடற்றொழிலை முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் போன்ற பிரதான செயற்பாடுகளை ஆற்றுகின்றது.

அவ்வாறே, கடற்றொழிலின் அபிவிருத்தியின் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், அறுவடைக்குப் பின்னரான சேதத்தை இழிவளவாக்குவதற்கு அவசியமான உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு நுகர்விற்கான மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல், மீனவக் குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்வடையச் செய்வதற்காக மீனவர்களையும் மீனவப் பெண்களையும் வலுவூட்டுதல் போன்றனவும் முன்னுரிமையளிக்கப்படும் செயற்பாடுகளாகும்.

## 1.2. நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

**நோக்கு**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை நிலையான முறையில் பேணியவாறு மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை வலுப்படுத்துவதனூடாக தேசிய பொருளாதாரத்திற்கு உகந்த பங்களிப்பை வழங்குதல்.

**பணிக்கூற்று**

கடற்றொழிலின் நிலையான அபிவிருத்தியினூடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வதேச சமுத்திர சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

## 1.2.1. குறிக்கோள்கள்

- உள்நாட்டு,சர்வதேச சமுத்திர சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் நடவடிக்கைகளின் முகாமைத்துவம்,முறைப்படுத்தல்,பேணிக்காத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி
- கடற்றொழில் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
- உள்நாட்டு மற்றும் சர்வதேச கடலில் மீன்பிடித்தலுக்கான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்
- மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல்
- சர்வதேச தரநிலைகளுக்கமைவாக ஏற்றுமதி மீன் உற்பத்திகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- அறுவடையின் பின்னரான வீண்விரயத்தை குறைத்தல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல்
- சர்வதேச சட்டங்கள் மற்றும் பிராந்திய பிரமாணங்களுக்கமைவாக கடற்றொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்
- துறைமுக அரச நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதித் தொடரிற்கமைவாக துறைமுக சேவைகளை நடைமுறைப்படுத்தல்
- ஆழ்கடலில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்களின் நடவடிக்கை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிகழ்நிலை முறையில் மீனவ மக்களுக்கும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் உகந்த சேவையை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிகழ்நிலையூடாக கடற்றொழில் துறைக்குரிய தரவுகளை விரைவாகவும் தெளிவாகவும் பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தல்.

## 1.3.பிரதான செயற்பாடுகள்

- கடற்றொழில் நடவடிக்கை ஒழுங்குவிதிகளை உருவாக்கல்,விதித்தல்,புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை உருவாக்கல்,விதித்தல்,புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை உருவாக்கல்,விதித்தல்,புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- கடற்றொழில் கலன்களை பதிவு செய்தல்,அடமானம் மற்றும் கடற்றொழில் நடவடிக்கை உரிமம் வழங்குதல்

- உயிர் மீன்களின் ஏற்றுமதிக்காக உரிமம் வழங்குதல்
- வெளிநாட்டு கடற்றொழில் கலன்களுக்கு மீன்களை கரையிறக்குவதன் பொருட்டு உரிமம் வழங்குதல்
- கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பான மீனவ மக்களின் அறிவை மேம்படுத்துதல்
- மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான நிறுவனக் கடன் வசதிகளின் ஒருங்கிணைப்பு
- கடற்றொழில் கலன் உற்பத்தி நிறுவனங்களை பதிவு செய்தல்,முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- மீன்பிடி உபகரண விநியோகஸ்தர்களை பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதன் பொருட்டு வழிகாட்டல்களை வழங்குதல்
- தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை
- கடற்றொழில் தொடர்பான தரவு சேகரித்தல்
- வெளிநாடுகளில் கைது செய்யப்படுகின்ற கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்களை மீள இலங்கைக்கு அழைத்து வருதல்
- கடலில் அநாதரவாகின்ற கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்களை மீள இலங்கைக்கு அழைத்து வருதல்
- ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீன்களை தரப் பரிசோதனைக்கு உட்படுத்துதல்
- மீன்களை பதனிடும் நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் மீன் ஏற்றுமதிக்காக சுகாதாரச் சான்றிதழ் வழங்கதல்
- உள்நாட்டு நுகர்விற்கான மீன் விற்பனை நிலையங்களின் தரத்தை மேம்படுத்தல்
- ஆழ்கடலில் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற பல்தினக்கலன்களுக்கு படகு கண்காணிப்பு உபகரணம் பொருத்துதல்
- கடற்றொழில் கலன் மற்றும் கரைக்கிடையில் வானொலி செய்திப் பரிமாற்ற வசதிகளை பெற்றுக் கொடுத்தல்
- எல்லைகளை மீறிப் பயணிக்கும் கடற்றொழில் கலன்கள் தொடர்பான அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல்
- நாளாந்த வானிலை அறிக்கை மற்றும் சீரற்ற வானிலை முன்னறிவித்தல்களை தினசரி வழங்குதல்
- படகுக் கண்காணிப்பு அமைப்பின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல்களிற்கமைவாக கலன்களை விழிப்புணர்வூட்டுதல்
- சட்டவிரோத கடற்றொழில் கலன்கள் மற்றும் தொழிலாளர்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களை விழிப்புணர்வூட்டுதல்

- கடற்றொழில் கலன்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக உரிமம் மற்றும் அழைப்புக் குறியீடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்
- கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்கள் தொடர்புறுகின்ற விபத்துக்களில் காப்புறுதிக்காக தகவல்களை உறுதிப்படுத்தி வழங்குதல்
- சர்வதேச கடல் எல்லைகளில் மிதக்கும் கலன்களை காப்பாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- மீனவக் குடும்ப உறுப்பினர்களின் தொழிற்கல்விக்காக பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- கடற்றொழிலாளர் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீனவ சமூகத்தை பாதுகாத்தல்
- கடனீரேரி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மீனவக் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- மீனவப் பெண்களிற்காக மாற்று வருமானமீட்டும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

## 1.4.நிறுவன கட்டமைப்பு

கடற்றொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் நிர்வகிக்கப்படுகின்றது. அதன் நடவடிக்கைகளை மிக வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றுவதற்காக மேலதிக பணிப்பாளர் நாயகம் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். திணைக்களத்தின் செயற்பாடுகளை திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பின்தொடர்தலை எளிதாக்குவதற்காக தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகள் 09 பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அவை,

1. முகாமைத்துவப் பிரிவு
2. அபிவிருத்திப் பிரிவு
3. தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு
4. கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு
5. ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு
6. தகவல் தொழில்நுட்பப் பிரிவு
7. நிர்வாகப் பிரிவு
8. நிதிப் பிரிவு
9. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இப்பிரிவுகளின் செயற்பாடுகள் பணிப்பாளர்கள் 07 பேர் மூலமும்,பிரதம கணக்காய்வாளர் மற்றும் பிரதம உள்ளக கணக்காய்வாளர் மூலமும் நிறைவேற்றப்படுகின்றன.

தீவின் கரையோர மாவட்டங்களை உள்ளடக்கியதாக 15 மாவட்ட உதவிப்பணிப்பாளர் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாவட்டத்தினதும் நடவடிக்கைகள் அம்மாவட்டத்தின் பிரதி/உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் நிறைவேற்றப்படுகின்றது.

மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக 149 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு கடற்றொழில் பரிசோதகர் பிரிவிற்கும் ஒரு கடற்றொழில் பரிசோதகர் அலுவலகம் வீதம் நிறுவப்பட்டுள்ளது. கடற்றொழில் பரிசோதகர்,கடற்றொழில் சமூக அபிவிருத்தி உதவியாளர், கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி அலுவலர் மற்றும் கடற்றொழில் அலுவலர் போன்ற அலுவலர்களினால் இந்த கடற்றொழில் பரிசோதகர் பிரிவினுள் சகல கடற்றொழில் நடவடிக்கைகளும் செயற்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே,கடற்றொழில் துறைமுகங்களை சார்ந்ததாக 18 பிரதேச தேடுதல் கண்காணிப்பு மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், வானொலி அலுவலர்கள் இரவிலும் பகலிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப் பிரதேச தேடுதல் கண்காணிப்பு மத்திய நிலையங்கள் மூலம் ஆழ்கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீன்பிடிப் படகுகள் மற்றும் தரைக்கிடையிலான வானொலி செய்திப் பரிமாற்றத் தொடர்பை 24 மணி நேரமும் வைத்திருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதன் மூலம், படகுகளிற்கான வானிலை அறிக்கைகள் மற்றும் அவசர முன்னெச்சரிக்கைகள் நாளாந்தம் வழங்கப்படுவதுடன்,படகு உரிமையாளர்களின் செய்திகளை வழங்குதல் மற்றும் கடற்றொழிலாளர்களின் செய்திகளை பெற்றுக் கொள்ளல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும்,கடற்றொழில் படகுகளிலிருந்து கிடைக்கும் அவசர அனர்த்த செய்திகளின் போது அவ்வேளையிலிருந்து அச்செயற்பாடு முடிவுறும் வரை தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இந்த அனைத்து செயற்பாடுகளும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள தேடுதல் நடவடிக்கை அறையினால் ஒருங்கிணைக்கப்படும்.

அதற்கு மேலதிகமாக, 07 மாவட்டங்களில் அமைந்துள்ள 25 துறைமுகங்களிலும் துறைமுக அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் கடற்றொழில் பரிசோதகர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் போன்ற அலுவலர்களினால் இரவிலும் பகலிலும் துறைமுகத்திலிருந்து வெளியேறும் படகுகளை சோதனையிடல், புறப்படுகை பதிவு செய்தல் மற்றும் அனுமதி வழங்குதல், துறைமுகத்தை வந்தடைகின்ற கடற்றொழில் படகுகளின் பயணத்தடவைகளுக்குரிய லொக் குறிப்பை பெற்றுக் கொள்ளல், மீன் அறுவடைகளின் சோதனை,ஏற்றுமதிக்கான மீன் தொகைக்கான அறிக்கைகளை தயாரித்து கொள்வனவாளர்களுக்கு வழங்குதல், சட்டவிரோத,அறிக்கையிடப்படாத மற்றும் முறைசாரா கடற்றொழில் நடவடிக்கைகள் நடைபெற்றிருப்பின் அது தொடர்பில் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளல், தரவுக் குறிப்பு (லொக் குறிப்பு) மற்றும் பெற்றுக் கொள்ளப்படும் வாக்கு மூலங்களை தலைமை அலுவலகத்திற்கு பெக்ஸ் மற்றும் ஈ மெயில் மூலம் அனுப்புதல் மற்றும் மாற்று கண்காணிப்பு அறிக்கை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
சர்வதேச் கடலில் மீன்பிடித்தலிற்காக செல்கின்ற அனைத்து பல்தினக் கலன்களையும் செய்மதித் தொழில்நுட்பத்தினூடாக கண்காணிப்பது சர்வதேச விதிகள் மற்றும் விதிமுறைகளின்

ஒருங்கிணைந்த பகுதியாகும். அதற்கமைவாக, 2015 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச கடலில் இயக்க உரிமம் பெற்ற கலன்கன் மாத்திரமே கலன் கண்காணிப்பு அமைப்பினூடாக (VMS) கண்காணிக்கப்பட்டதுடன், மேற்கூறப்பட்ட சர்வதேச விதிகள் மற்றும் மீன் ஏற்றுமதி தேவைப்பாட்டிற்கமைவாக அனைத்து பல்தினக் கலன்களையும் கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) மூலம் கண்காணிப்பதற்கான தேவைப்பாடு எழுந்தது. பல்தினக் கலன்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் அல்லாத பிற சட்டவிரோத நடவடிக்கைகளை (உதா:சட்டவிரோத புலம்பெயர்வு மற்றும் போதைப் பொருள் கடத்தல்) இனங்காண்பதற்கான செலவு குறைந்த முறையாகவும் இத்தேவைப்பாடு உருவாகியுள்ளது.

அதற்கமைவாக, மேற்குறித்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்கின்ற 4200 கலன் கண்காணிப்பு அமைப்பு (VMS) அலகுகளை உள்ளடக்கிய பூரணமான கலன் கண்காணிப்பு அமைப்பொன்று அவுஸ்திரேலிய அரசின் உதவியுடன் திணைக்களத்தினுள் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புதிய கலன் கண்காணிப்பு அமைப்பிற்கு (VMS), அனைத்து துறைமுக அலுவலகங்களினூடாகவும் உள்நுழைவதற்கான இயலுமை காணப்படுவதுடன் தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்தின் (FMC) மூலம் 24x7 பூராகவும் அந்நடவடிக்கைகள் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள்,மனித வியாபாரம்,போதைப் பொருள் வியாபாரம் மற்றும் சட்டவிரோத எல்லை தாண்டல்கள் போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் நிகழக்கூடிய ஆபத்தான கலன்களை இந்த நிலையத்திலுள்ள வசதிகள் மூலம் அடையாளங் காண முடியும். அத்துடன், அவசர அனர்த்த நிலைமைகளில் கடற்றொழில் கலன்களிற்கான வசதிகளை வழங்குவதற்கும் இவ்வமைப்பை பயன்படுத்த முடியும். இந்த கடற்றொழில் கண்காணிப்பு மத்திய நிலையம் சகல நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி நவீனமயமாக்கப்பட்டுள்ளதுடன் தற்காலத்தில் ஆசியாவில் உள்ள அதி நவீன கண்காணிப்பு மத்திய நிலையமாகவும் இதனைக் கருத முடியும்.

அவ்வாறே, கலன் கண்காணிப்பு அலகு, கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு மற்றும் கடற்றொழில் துறைமுகங்களில் அமைந்துள்ள சர்வதேச கடற்றொழில் நடவடிக்கை அலகுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற உப அலுவலகமொன்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் மூலம் கடற்றொழில் உற்பத்திகளின் ஏற்றுமதியின் போது,விசேடமாக ஐரோப்பிய சங்க நாடுகளுக்கான ஏற்றுமதியின் போது ஒவ்வொரு மீன் தொகைக்கும் மீன்பிடிச் சான்றிதழ் (Catch Certificates) வழங்குதல் மற்றும் கடற்றொழில் உற்பத்திகளின் மீள்ஏற்றுமதிக்காக மீன்கள் இறக்குமதி செய்யப்படும் போது தேவையான சோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. நாளாந்தம் விமானம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகளுக்கு தேவையான சான்றிதழ்களை விரைவாகவும் தாமதமின்றியும் வழங்குவதற்காக தரக்கட்டுப்பாட்டு அலகொன்று சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், அது 24 மணி நேரமும் (24x7) திறந்துள்ளது.

தரையை வந்தடைகின்ற ஒவ்வொரு பல்தினக் கலனினதும் மொத்தப் பயணத் தடவைகள் தொடர்பாக அமைவிடத் தகவல்கள் அடங்கிய கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) பயணவழி

அக்கலனிற்குரிய லொக்புத்தக பக்கத்துடன் பரீட்சிக்கப்பட்ட பின்னர் கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) தரவுகளுடன் பொருந்தின் மாத்திரம் அம்மீன் தொகையை ஏற்றுமதி செய்ய முடியுமானவாறும் இக்கலன் எவ்வித சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையையும் மேற்கொள்ளாது சட்டபூர்வமாக மீன்களை பிடித்துக் கொண்டு வந்த கலன் என்பதாகவும் அத்தாட்சிப்படுத்தி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் சரிபார்ப்பு அறிக்கை வழங்கப்படுகிறது. இந்த சரிபார்ப்பு அறிக்கை, கட்டுநாயக்க விமான நிலைய தரக்கட்டுப்பாட்டு அலகிற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அக்கலனின் அப்பயணத் தடவைக்குரிய மீன்களுக்கான ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான மீன்பிடிச் சான்றிதழ் (Catch Certificate) வழங்கப்படுகிறது. இந்த மீன்களின் தகவல் சரிபார்ப்பு செயன்முறை வாரத்தின் 07 நாட்களும் 24 மணி நேரமும் இரவிலும் பகலிலும் (24x7) செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள், துறைமுக நடவடிக்கை அலுவலகங்கள் (21), கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கலன் கண்காணிப்பு அலகு,சர்வதேச கடற்றொழில் நடவடிக்கை அலகு மற்றும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலகு போன்ற அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும். இந்த செயன்முறை காரணமாக, பல்தினக் கலன்கள் மூலம் நாட்டிற்கு கொண்டு வரப்படும் சட்டபூர்வ மீன் தொகை உரியவாறு அறிக்கைகளுடன் மற்றும் உரிமங்களுடன் பிடிக்கப்பட்டவை என்பதை அத்தாட்சிப்படுத்தி ஏற்றுமதிக்காக அனுப்புவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

## 1.5 திணைக்களத்தின் அமைப்பு விளக்கப்படம்



# அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1. சிறப்பு அடைவுகள்

**1.** கலன் கண்காணிப்பு உபகரணங்கள் தொடர்பாக காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கிணங்காமை தொடர்பில் 2024 ஆம் ஆண்டினுள்

- கலன் புறப்படுகை இரத்துச் செய்தல் **(Departure Cancel)- 511** கலன்கள்
- சட்ட நடவடிக்கைக்காக அனுப்புதல் **- 47** கலன்கள்

**2.** புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தை வரைவாக்கல்

**2.1** புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் வரைவாக்கப்பட்டு கௌரவ அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது 1996 ஆம் ஆண்டின் 2 அம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்தை நீக்கி அவற்றுடன் தொடர்பான அல்லது இடைநேர்விளைவான விடயங்களிற்கான ஏற்பாடுகளை ஆக்கும் பொருட்டான சட்டமாகும். அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவ்வரைவை பரிசீலித்து வேறு மேலதிக முன்மொழிவுகளை சட்ட வரைஞரிடம் முன்வைப்பதற்காக அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

**3. .** கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

**3.1 1996** ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தை திருத்துவதற்கான சட்டம் 01 பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம்

**3.2** கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 05 ஒழுங்குவிதிகளுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

- ஆழ்கடலில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்றொழில் படகுகளை செய்மதித் தரவுகள் மூலம் கண்காணிக்கும் அமைப்பை (VMS) செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதி 2015 (திருத்தம்)
- கடற்றொழில் நடவடிக்கை ஒழுங்குவிதி (திருத்தம்)
- பொழுது போக்கிற்காக மீன்பிடிக்கும் தொழிலை முகாமைத்துவம் செய்யும் ஒழுங்குவிதி
- இயந்திரக் கடற்றொழில் படகுகள் புறப்படுகை மற்றும் வருகை ஒழுங்குவிதி
- செயற்கை அடி மூலக்கூறுகள் மீது வளர்க்கப்படும் பவளப்பாறை இனங்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குவிதி

**3.3** கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் வரைவு செய்யப்பட்ட ஒழுங்குவிதித் தொடர் 01 சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- மீனவர்களின் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் தொடர்பான ஒழுங்குவிதி

**3.4** கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் வரைவாக்கப்பட்ட ஒழுங்குவிதித்தொடர்கள் 03 சட்டவரைஞர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது..

- மீன்களை கையாளுதல் மற்றும் விநியோகித்தல் ஒழுங்குவிதி
- மீனவர் அடையாள அட்டை வழங்குதல் ஒழுங்குவிதி - 2023
- கிராமிய கடற்றொழில் அமைப்புகள்/மாவட்ட அமைப்புகள்/தேசிய கடற்றொழில் சம்மேளனம் ஆகியவற்றை நிறுவுவதற்கான ஒழுங்குவிதி 2023

**3.5** கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 02 ஒழுங்குவிதிகளுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

- **2019** படகோட்டிகளுக்கு (உள்நாட்டு மீன்பிடிப் படகுகளின்) நிபுணத்துவ சான்றிதழ் வழங்குவதற்கான ஒழுங்குவிதிகள் (திருத்தம்)
- சேற்று நண்டுகள் கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் **2024**

**3.6** கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் அமுலாக்கப்படும் ஒழுங்குவிதித் தொடர் 01 வரைவாக்கப்பட்டுள்ளது.

- தகரத்திலடைக்கப்பட்ட மீன்கள் தொடர்பான ஒழுங்குவிதி

**4.** மீன்கள் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக வழங்கப்படும் உரிமங்களின் எண்ணிக்கை

- கடலுணவு ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழ் எண்ணிக்கை **26,210**
- மீன்பிடித்தல் சான்றிதழ் எண்ணிக்கை **16,832**
- பதிவு செய்யப்பட்ட, மீன் உற்பத்திகளை பதனிடும் நிறுவனங்கள் மற்றும் மீன்கள் பொதி செய்யும் நிலையங்களின் எண்ணிக்கை **65**

**5. .** தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம்

**1.** 100% திணைக்களத்தின் வளங்களை மாத்திரம் பயன்படுத்தி மீனவர் அடையாள அட்டைகள் 10,000 அச்சிடுதல்.

2. இலங்கையின் சிறந்த இணையத்தளங்களை தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட Bestweb.lk போட்டியில் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு அரச இணையத்தளப் பிரிவில் மூன்றாமிடத்திற்கான விருது பெற்றுக் கொள்ளல்
3. திணைக்கள அலுவலர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக **ALDFG** மற்றும் **Pelagisko** ஆகிய செயற்றிட்டங்களின் கீழ் 181 புதிய டெப் கருவிகள் கிடைத்தமை.
4. கடமை நடவடிக்கைகளுக்காக வலைப்பின்னல் மென்பொருள் **(MSDFAR)** பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், இதுவரை அதன் மூலம் வெற்றிகரமாக 49,000 கடற்றொழிலாளர் பதிவுகள் **(Fishermen Registration),**180 கப்பல் தள பதிவுகள் **(Yard Registration),** 1,535 படகுத்திட்ட அங்கீகாரங்கள் **(Boat Design Approval),** 7,400 படகு இலக்கப் பதிவுகள் **(Boat Number Registration),**4,590 படகுப் பதிவுகள் **(Boat Registration),** 4,485 படகு புதுப்பித்தல்கள் **(Boat Renewal),** 10,200 இயக்க உரிமங்கள் வழங்கல் **(Operation License Issuance),** 870 இயக்க உரிம புதுப்பித்தல்கள் **(Operation License Renewal),**1,600 அறிவியல் தரவு உட்புகுத்தல்கள் **(Scientific Data Entry),** 9,420 படகோட்டி பதிவுகள் **(Skipper License Registration),** 1,427 மீன்பிடித்தல் சான்றிதழகள் வழங்கல் **(Catch Certificate Issuance)** மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5. அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியின் கீழ் **1779 VMS** உபகரணங்கள் பொருத்தப்பட்டன.




படம் : கண்காணிப்பு செயற்பாட்டு மையம்




படம் :**Bestweb.lk** போட்டித் தொடரில் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு அரச இணையத்தளங்கள் பிரிவில் மூன்றாமிடத்திற்கு கிடைத்த விருது

**6.** வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்களை மீட்டலும் நாட்டிற்கு அழைத்துக் கொள்ளலும்

| கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 125 | 60 | 33 | 03 |

**7.** உள்நாடு,சர்வதேச மற்றும் வெளிநாடுகளுக்கு சொந்தமான கடல் எல்லைகளில் மிதந்து செல்லும் கலன்களை காப்பாற்றுதல்

| மீட்புப் பணிகள் மேற்கொண்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை | கப்பல்களில் மோதி அழிவடைந்த கலன்கள் | கைவிடப்பட்ட பல்தினக் கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 102 | 35 | 04 | 06 |

8. ஆழ்கடலில் கடற்றொழில் நடவடிக்கை மேற்கொள்ளும் கலன்களின் தகவல்களை சரிபார்த்தல்

| | | |
|---|---|---|
| **1.** | ஆழ்கடல் நடவடிக்கைகள் தொடர்பாக அலகிற்கு கிடைத்த லொக் பிரதிகளின் எண்ணிக்கை | **2197** |
| **2.** | நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்பட்ட சரிபார்ப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | **2150** |

**8.** பலநாள் கலன்களினால் மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளுக்குரிய மீன்பிடிப் பதிவுத் தாள்களை சேகரித்தல்

| | | |
|---|---|---|
| **.1** | துறைமுக நடவடிக்கை அலுவலகங்களிற்கு கிடைத்த மீன்பிடி பதிவுத் தாள்களின் எண்ணிக்கை | **39438** |
| **2.** | லொக் தரவமைப்பினுள் உள்ளிடப்பட்ட எண்ணிக்கை | **30490** |

9. தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சேவை வழங்குதல்

| | | |
|---|---|---|
| **1.** | நிகழ்நிலை முறையில் கலன்களுக்கு பயணத்தடவை வழங்குதல் | **72794** |
| **2.** | **IOTC** தேவைகளுக்காக பேணப்படும் தரவமைப்பினுள் உட்புகுத்தப்பட்ட கலன் புகைப்படங்களின் எண்ணிக்கை | **352** |
| **3.** | **AIS** உபகரணங்களை சட்டபூர்வமாக பதிவு செய்தல் | **166** |

**10.** விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் **- 2024**

| **தொடர் இலக்கம்** | **செயற்பாடுகள்** | **பணிக் குறிகாட்டிகள்** | **இலக்குகளை அடைதல்** |
|---|---|---|---|
| **01** | மாவட்ட மட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு எதிரான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளின் மேற்பார்வை | மாவட்ட மட்டத்தில் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பேணப்படும் இற்றைப்படுத்திய தரவு அறிக்கை | இற்றைப்படுத்திய தரவறிக்கை தொடர்ச்சியாகப் பேணப்படுகின்றது. |
| **02** | நிர்வாகத் தண்டம் விதிப்பதற்காக அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் அனுப்பப்படும் கோரிக்கைகள்,உரிய செயன்முறைகளுக்கமைவாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் நிர்வாகத் தண்டம் விதிப்பதற்கான முறைமையை தயாரித்தல் | நிர்வாகத் தண்டம் விதிப்புக்கு உட்படுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | **37** |
| **03** | உறுதிப்படுத்தப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல். | நடாத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | **0** |

| | | | |
|---|---|---|---|
| **04** | கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) மூலம் அடையாளம் காணப்பட்ட சட்ட மீறல்களுக்கான விசாரணைகளை மேற்கொள்ளல். | VMS மூலம் அடையாளம் காணப்பட்ட சட்ட மீறல்களுக்கான விசாரணைகளின் எண்ணிக்கை | **800** |
| **05** | விசேட சுற்றி வளைப்புகளை மேற்கொள்ளல். | திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புகளின் அளவை செயற்படுத்திய சதவிகிதம் | **0** |
| **06** | மீன்பிடிக் கலன்கள்,மீன்பிடி உபகரணங்கள்,உற்பத்திகள் மற்றும் மீன்பிடித் தூண்டில் விநியோக நிறுவனங்கள் தொடர்பான சோதனைகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகள். | 1.சோதனைகளின் எண்ணிக்கை | **16** |
| | | 2.தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | **0** |

## **11.** அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்

இலங்கையின் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பை வழங்குவதற்காக வினைத்திறனான மற்றும் சூழல் நேயமிக்க நவீன தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தி கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல்,ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் மீனவ மக்களின் சமூக,பொருளாதார மற்றும் சமூக நலன்புரி நிலையை உயர்த்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும்.

கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் முக்கிய செயற்பாடுகள்

- மீன்பிடிக் கலன் உற்பத்தி நிறுவனங்களை பதிவு செய்தல்,ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிக் கலன் வடிவமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கல்.
- மீன்பிடி உள்ளீடுகள் விநியோகஸ்தர்களை பதிவு செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடித் துறைக்கு நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கரையோர நிர்மாணிப்புத் திட்டங்களுக்குரிய சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு மீன்பிடிக் கைத்தொழிலுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பரிந்துரைகள் வழங்குதல்.
- மீன்பிடித்துறைக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
- மாற்று வருமானமீட்டல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழிலாளர் காப்பீட்டை நடைமுறைப்படுத்தல்.
- மீனவர் ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்தலின் ஊடாக மீனவ சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- கடற்றொழில் இழப்பீடு வழங்குதல் தொடர்பாகச் செயற்படுதல்.
- தியவர கெகுளு சிறுவர் சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கடனீரேரி சூழற்றொகுதிகளின் அபிவிருத்தி மற்றும் பேணலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கடனீரேரி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் வருடாந்த செயற்றிட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து முன்னேற்ற ஆய்வு செய்தல்.
- விசேட கடற்றொழில் பிரச்சினைகளை தீர்த்தல்.

**கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்**

கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றம்

| செயற்பாடு | 2024.12.31வரையான முன்னேற்றம் |
|---|---|
| காப்புறுதி செய்யப்பட்ட மொத்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை | **27986** |
| காப்புறுதி செய்யப்பட்ட மொத்த கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | **23756** |
| மீனவர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்தோர் எண்ணிக்கை | **69095** |
| கடற்றகுதிச் சான்றிதழ் வழங்குதல் | **28421** |
| மீன்பிடிக் கலன் கட்டும் தளங்களை பதிவு செய்தல் | **55** |
| மீன்பிடிக் கருவிகள் விநியோகஸ்தர்களை பதிவு செய்தல | **19** |
| மீன்பிடி உபகரண விநியோகஸ்தர்களை பதிவு செய்தல் | **07** |




விளக்கப்படம் : காப்பீடு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை

## தீவர ரெகும புதிய காப்பீட்டை அறிமுகம் செய்தல்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரமாணங்களுக்கமைவாக, கடற்றொழிலானது மிகவும் சவாலான, ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழிலாகப் பெயரிடப்பட்டடுள்ளது.இந்நாட்டின் கடற்றொழிலை கருதுகையில் உவர்நீர் கடற்றொழிலில் உள்ள அபாயம் நன்னீர் கடற்றொழிலை விட உயர் வீதத்தில் உள்ளது.கடற்றொழில் அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி இந்நாட்டில் உள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 315,720 ஆகும். அத்துடன் அவர்களுள் 225,070 பேர் உவர்நீர் கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர்.மேலும் அதில் 87% கரையோர கடற்றொழிலாளர்கள் ஆவர். 34,300 பேர் பல்தினக் கலன்கள் மூலம் கடலோர மற்றும் ஆழ்கடல் கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர்.இந்நாட்டிலுள்ள மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை 266,640 ஆவதுடன் நேரடியாக கடற்றொழிலில் தங்கியிருப்போர் எண்ணிக்கை 1,123,000 ஆகும். அத்துடன்,இத்துறை தொடர்பான மறைமுகத் தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் இணையான வேறு வழிகளை ஏற்படுத்திக் கொள்வோர் 03 மில்லியன் பேர் அளவில் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுஅதற்கமைவாக,இலங்கையின் மொத்த சனத்தொகையில் 18% ஆனோர் தமது வாழ்வாதாரத்திற்காக கடற்றொழிலில் தங்கியுள்ளனர்.

இலங்கையில் தொழிலில் ஈடுபடுகின்ற மொத்த கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 315,720 ஆகும். இவர்களுள் இதுவரை நடைமுறையிலிருந்த காப்புறுதித் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தோர்,தொழிலில் ஈடுபடுவோரில் 1.73% ஐ அண்மித்தோராவர்.நடைமுறையிலுள்ள காப்புறுதித் திட்டத்தின் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளை அடையாளங் கண்டு கடற்றொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றும் சலுகையளிக்கக்கூடிய தவணைக் கொடுப்பனவைக் கொண்ட புதிய காப்புறுதி முறையொன்றை நடைமுறைப்படுத்துவதன் தேவைப்பாடு எழுந்தமையால் கடற்றொழில் அமைச்சு மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து தீவர ரெகும தனிநபர் திடீர் விபத்துக் காப்புறுதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் தீவர ரெகும தனிநபர் திடீர் விபத்து காப்புறுதியின் கீழ் கடற்றொழிலாளர் ஒருவரின் மரணத்தின் போது அவருக்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையானது அவரில் தங்கியிருந்தோருக்கு வழங்கப்படுவதுடன் மொத்தத் தொகையில் பாதி மனைவிக்கும் மற்றைய பாதி குடும்பத்தின் சிறு வயது பிள்ளைகளுக்கிடையிலும் பிரிக்கப்படுதல் வேண்டும்.காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால 03 மாற்று முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

**<u>தீவர ரெகும காப்பீட்டின் உள்ளடக்க விபரம்</u>**

| **உள்ளடக்க விபரம்** | **காப்பீட்டுத் தொகை (ரூ.)** | | |
|---|---|---|---|
| 01. தனிநபர் திடீர் விபத்துக் காப்புறுதி | மாற்றீடு 01 | மாற்றீடு 02 | மாற்றீடு 03 |
| திடீர் விபத்துக் காப்புறுதி | **1,200,000** | **1,500,000** | **2,000,000** |
| நிரந்தர முழு இயலாமை | **1,200,000** | **1,500,000** | **2,000,000** |
| நிரந்தர பகுதி இயலாமை | **600,000** | **750,000** | **1,000,000** |
| **02.** காணாமல் போதல் | | | |
| கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கும் போது நிகழும் திடீர் விபத்து காரணமாக காணாமல் போன கடற்றொழிலாளருக்கு 05 மாதங்களின் பின்னர் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படும். | மாதாந்தம் 7,500 வீதம் 12 மாதங்கள் வரை | மாதாந்தம் 7,500 வீதம் 12 மாதங்கள் வரை | மாதாந்தம் 7,500 வீதம் 12 மாதங்கள் வரை |
| ஒரு வருடத்திற்கு மேலாக காணாமல் போயிருப்பின் காப்பீட்டுத் தொகையில் இருந்து மேலே செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையை கழித்த பின்னர் எஞ்சியது செலுத்தப்படும். | **1,200,000** | **1,500,000** | **2,000,000** |
| **03.**வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கான கொடுப்பனவு<br><br>திடீர் விபத்து அல்லது சுகயீனத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது ஒரு மீனவக் குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு அதிக பட்சம் 14 நாட்களுக்கு கொடுப்பனவு செலுத்தப்படும்<br>மீனவர் மற்றும் துணைவர் – 18 வயது முதல் 65 வயது வரை<br><br>விவாகமாகாத மற்றும் தொழிலற்ற பிள்ளைகள் - 21 வயது வரை | நாளொன்றிற்கு ரூ.**500/-** (அதிகபட்சம் 14 நாட்கள்) | நாளொன்றிற்கு ரூ.**500/-** (அதிகபட்சம் 14 நாட்கள்) | நாளொன்றிற்கு ரூ.**500/-** (அதிகபட்சம் 14 நாட்கள்) |
| **04.** கல்விச் செலவுக் கொடுப்பனவு<br><br>பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்விக்காக அதிக பட்சம் இரண்டு பிள்ளைகளுக்கு மாதாந்தம் ரூ.1000 வீதம் ஒரு வருடத்திற்கு கொடுப்பனவு செய்யப்படும. | **1,000** | **1,000** | **1,000** |
| **05.** .இறுதிச் சடங்கு கொடுப்பனவு(இயற்கை மரணத்திற்காக மாத்திரம் செலுத்தப்படும்) | **200,000** | **200,000** | **200,000** |
| **06.** விமான டிக்கட் செலவு<br><br>கடற்றொழில் நடவடிக்கை காரணமாக வேறு நாட்டிற்கு அடித்துச் செல்லப்படல்/கைது செய்யப்படலின் போது | **40,000** | **40,000** | **40,000** |

**இயற்கை அனர்த்தங்களுக்காக இழப்பீடு வழங்கல்**

இத்திட்டமானது கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் நிதியமைச்சு என்பன ஒருங்கிணைந்து அரசின் நேரடி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்காக பயனாளியிடமிருந்து எவ்வித அறவீடும் மேற்கொள்ளப்பட மாட்டாது. இதன் கீழ் மீன்பிடி

நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மரணிக்கும் கடற்றொழிலாளர் ஒருவருக்காக அவரில் தங்கியிருந்தோருக்கு ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கப்படுகிறது. 2024 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரை 5 பயனாளிக் குடும்பங்களிற்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் டெவோன் 05 மீன்பிடிக் கலனில் மரணித்த 4 கடற்றொழிலாளர்களின் குடும்பங்களிற்கு ஒருவர் சார்பாக 05 இலட்சம் ரூபாய் வீதம் ரூ.**2,000,000.00** உதவிக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. அரசினால் இயற்கையான மரணத்தின் போது வழங்கப்படும் 1 மில்லியன் ரூபாய் கொடுப்பனவை பெறுவதற்கு, அம்மரணமானது இயற்கை அனர்த்த நிலைமையினால் ஏற்பட்டது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக அனர்த்த நிகழ்வறிக்கை வழங்குவது கட்டாயமாகும்.

## தியவர திரிய கடன் திட்டம்

நவீன தொழில்நுட்பத்தின் அறிமுகத்தினூடாக கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதையும் தரமான மீன் உற்பத்திகளை அதிகமாகப் பெற்றுக் கொள்வதையும் நோக்காகக் கொண்டு மீன்பிடிக் கலன்களை மேம்படுத்துதல் மற்றும் மீனவ மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகியவற்றிற்காக கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வங்கி இணைந்து தியவர திரிய குறைந்த வட்டி கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.
இதன் கீழ், ஒரு பயனாளிக்கு அதிக பட்சம் ரூபாய் 15 மில்லியன் கடன் வழங்கப்படுவதுடன் வட்டி வீதம் கீழ்வருமாறு

- 2 மில்லியன் ரூபாய்களுக்கு குறைவான கடன் தொகைக்கு 5% வட்டி பயனாளியிடமிருந்து அறவிடப்படும்..
- 2 மில்லியன் ரூபாயை விடக் கூடிய கடன் தொகைக்கு 7% வட்டி பயனாளியிடமிருந்து அறவிடப்படும்.
- ஒரு பயனாளிக்கு அரசினால் 4% வட்டி மானியம் இக்கடன் திட்டத்திற்கு வழங்கப்படும்.
- மீன்பிடிக் கலன் உற்பத்தி நிலையங்களை மேம்படுத்துதல், 55 அடிகளை விடக் கூடிய நீளமுள்ள கலன்கள் உற்பத்தி, நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல, (RSW மற்றும் CSW), செவுள்வலை தொழில்முறை மற்றும் வின்ச் பொருத்துவதற்கான கடன் வழங்கல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தியவர திரிய முதலாம் கட்டத்தின் கீழ் 755 பயனாளிகளுக்கு 1 பில்லியன் ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன் தியவர திரிய இரண்டாம் கட்டத்தில் 1,017 பயனாளிகளுக்கு 1.8 பில்லியன் ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கூட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் இதன் 4% வட்டித் தவணைக் கொடுப்பனவானது இலங்கை வங்கிக்கு அனுப்பப்படுவதுடன் 2031 ஆம் ஆண்டு வரை அது செலுத்தப்படவுள்ளது.

**<u>தியவர கெகுளு சிறுவர் சேமிப்புக் கணக்கு</u>**

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழிலானது மிகவும் சவாலான, ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழிலாகப் பெயரிடப்பட்டுள்ளது. பெரும்பான்மையான கடற்றொழிலாளர்களின் குடும்பங்களின் பொருளாதாரம் முழுமையாக அக்குடும்பத் தலைவரின் வருமானத்திலேயே தங்கியுள்ளது. அந்த மீன்பிடிக் குடும்பங்களின் போஷாக்கு, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு என்பனவும் முழுமையாகத் தங்கியிருப்பது கடற்றொழிலாளியின் வருமானத்திலாகும். கடற்றொழிலாளிக்கு ஏற்படும் விபத்து காரணமாக அக்குடும்பத்தின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைவதுடன், இதன் போது பிரதானமாக மீனவக் குடும்ப பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. அதற்கமைவாக, மீனவக் குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும்,கடற்றொழிலின் பால் இளைஞர் யுவதிகளை ஈர்ப்பதற்கும், மீனவர்கள் தமது குடும்பத்தின் எதிர்காலத்திற்காக முதலீடு/சேமிப்பு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் சிக்கனத்தை ஊக்குவித்தல் போன்றவற்றின் பால் எமது திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

அற்கமைவாக, குழந்தைகளுக்கு மிகப் பரந்த காப்பீடொன்றை வழங்குவதற்கான கடற்றொழில் அமைச்சின் கோரிக்கையின் மேல் இலங்கை வங்கியினால் மீனவக் குழந்தைகளுக்கு தனித்துவமான தியவர கெகுளு சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.




**படம் : தியவர கெகுளு சிறுவர் சேமிப்புக் கணக்கு**

**2024 ஆம் ஆண்டில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் அதன் முன்னேற்றம்**

**எரிபொருளாக மண்ணெண்ணெய் பயன்படுத்தும் கடற்றொழில் கலன்களில் வெளியிணைப்பு இயந்திரம் கொண்ட சிறிய கலன்கள் ( OFRP) மற்றும் பாரம்பரிய இயந்திரக் கலன்களுக்கு (MTRB) சீன கூட்டரசாங்கத்தின் உதவியின் கீழ் மண்ணெண்ணெய் வழங்கும் வேலைத்திட்டம் - 2023-2024 [OFRP (Out Board Fiber Reinforced Plastic Boat), MTRB (Mechanized Traditional Boat)]**

சீன கூட்டரசாங்கத்தின் மூலம் இலங்கை மீனவ சமூகத்தின் பயன்பாட்டிற்காக உதவியாக அளிக்கப்பட்ட 3.79 மில்லியன் லீட்டர் டீசலுக்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் சிறியளவிலான கடற்றொழிலாளர்களின் நுகர்விற்காக மண்ணெண்ணெய்

வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அப்போது காணப்பட்ட விலைகளின் படி 4.32 மில்லியன் லீட்டர் மண்ணெண்ணெய் விடுவிப்பதற்கான இயலுமை காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இந்த எரிபொருள் விநியோகம் 02 கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, முதலாம் கட்டத்தில் 75 லீட்டர் மண்ணெண்ணெயும் இரண்டாம் கட்டத்தில் 78 லீட்டர் மண்ணெண்ணெயும் என்றவாறு இரண்டு கட்டங்களின் முடிவிலும் ஒரு கடற்றொழில் கலனிற்கு 153 லீட்டர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன் மூலம், எரிபொருளாக மண்ணெண்ணெய் பயன்படுத்தும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள, நாடு முழுவதும் தொடர்ந்து கடற்றொழிலில் ஈடுபடும் **OFRP** மற்றும் **MTRB** கலன்களுக்கு அந்த சலுகையை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைவாக, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, தங்காலை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய 15 கடற்றொழில் மாவட்டங்களிலும் ஏற்கனவே தொடர்ச்சியான கடற்றொழில் கலன்களாக இனங்கானப்பட்ட 25,564 கலன்களிற்கு முதலாம் கட்டத்திலும், 28,806 கலன்களிற்கு இரண்டாம் கட்டத்திலும் அந்த சலுகைகளை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது**.**

அதற்கமைவாக, முதலாம் கட்ட எரிபொருள் விநியோகம் 96 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், கலனொன்றிற்கு 75 லீட்டர் வீதம் 24,340 **OFRP** மற்றும் **MTRB** கலன்களிற்கு 1,825,500 லீட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 97 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டதுடன், கலனொன்றுக்கு 78 லீட்டர் வீதம் 24,024 **OFRP** மற்றும் **MTRB** கலன்களுக்கு 1,873,872 லீட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டதுடன், முதலாம் கட்டத்தில் எரிபொருள் வழங்கப்படாத கலன்களுக்காக கலனொன்றுக்கு 153 லீட்டர் வீதம் 4,084 **OFRP** மற்றும் **MTRB** கலன்களுக்கு 624,852 லீட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது. அதன்படி, 28,108 கலன்களுக்கு 2,498,724 லீட்டர் மண்ணெண்ணெய் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2024.03.05 ஆம் திகதியின் போது விநியோகிக்கப்பட்டிருந்தது

**முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகம்**

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகம்

| மாவட்டம் | முதலாம் கட்டம் | | இரண்டாம் கட்டம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | 2023.07.28 ஆம் திகதியில் மண்ணெண்ணெய் பெற்றுக் கொண்ட மொத்தக் கலன்களின் எண்ணிக்கை | மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | | | 2024.03.05 ஆம் திகதியில் மண்ணெண்ணெய் பெற்றுக் கொண்ட மொத்தக் கலன்களின் எண்ணிக | | | | | |
| | | | 78 (L) | 153 (L) | மொத்தக் கலன்களின் எண்ணிக்கை (அங்கீகரிக்கப்பட்ட) | இரண்டாம் கட்டம் மாத்திரம் (கலன்கள்) | வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் (75 L) | முதலாம், இரண்டாம் கட்டம் (கலன்கள்) | வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் (153 L) | மொத்த கலன்களின் எண்ணிக்கை (வழங்கப்பட்ட) | வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் லீட்டர் (மொத்த) |
| மட்டக்களப்பு | 1796 | 1725 | 1727 | 124 | 1851 | 1711 | 133458 | 111 | 16983 | 1822 | 150441 |
| கொழும்பு | 364 | 291 | 291 | 114 | 405 | 287 | 22386 | 112 | 17136 | 399 | 39522 |
| சிலாபம் | 1669 | 1430 | 1428 | 449 | 1877 | 1391 | 108498 | 395 | 60435 | 1786 | 168933 |
| காலி | 702 | 691 | 691 | 110 | 801 | 678 | 52884 | 105 | 16065 | 783 | 68949 |
| யாழ்ப்பாணம் | 5478 | 5282 | 5283 | 642 | 5925 | 5271 | 411138 | 618 | 94554 | 5889 | 505692 |
| கிளிநொச்சி | 1045 | 1021 | 1020 | 140 | 1160 | 1018 | 79404 | 139 | 21267 | 1157 | 100671 |
| களுத்துறை | 418 | 412 | 412 | 41 | 453 | 411 | 32058 | 39 | 5967 | 450 | 38025 |
| கல்முனை | 1000 | 973 | 973 | 155 | 1128 | 968 | 75504 | 146 | 22338 | 1114 | 97842 |
| மன்னார் | 2431 | 2309 | 2310 | 714 | 3024 | 2254 | 175812 | 634 | 97002 | 2888 | 272814 |
| மாத்தறை | 1015 | 982 | 982 | 76 | 1058 | 963 | 75114 | 70 | 10710 | 1033 | 85824 |
| தங்காலை | 966 | 946 | 946 | 101 | 1047 | 939 | 73242 | 99 | 15147 | 1038 | 88389 |
| திருகோணமலை | 3545 | 3537 | 3542 | 380 | 3922 | 3535 | 275730 | 376 | 57528 | 3911 | 333258 |
| புத்தளம் | 2617 | 2502 | 2496 | 599 | 3095 | 2394 | 186732 | 456 | 69768 | 2850 | 256500 |
| நீர்கொழும்பு | 1405 | 1207 | 1208 | 357 | 1565 | 1181 | 92118 | 334 | 51102 | 1515 | 143220 |
| முல்லைத்தீவு | 1113 | 1032 | 1032 | 461 | 1493 | 1023 | 79794 | 450 | 68850 | 1473 | 148644 |
| **மொத்தம்** | **25564** | **24340** | **24341** | **4463** | **28804** | **24024** | 1873872 | **4084** | 624852 | **28108** | 2498724 |

**கடற்றொழிலின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் - (கொழும்பு துறைமுகத்தை விஸ்தரிக்கும் செயற்றிட்டத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திக்காக மணல் பெற்றுக் கொண்டமை காரணமாக கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை இழிவளவாக்குதல்.)**

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை விஸ்தரிக்கும் செயற்றிட்டத்துடன் தொடர்பாக கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை இழிவளவாக்குவதன் பொருட்டு கடற்றொழிலின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 140 மில்லியன் ரூபாய் பணம் இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் மேற்கு முனைய அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் கடற்றொழில் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.ஏற்கனவே அத் தொகை கடற்றொழில் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன்,அத்தொகையானது,இச்செயற்றிட்டம் காரணமாக பாதிக்கப்படும் கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்ட கடற்றொழில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படவுள்ளது.அதே வேளை நீர்கொழும்பு மாவட்டத்தில் சிறியளவிலான மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள 25 மீனவர்களுக்கு தற்போது தெப்பம் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.அதற்கு 3 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்வதற்கு கடற்றொழில் அமைச்சின் செயலாளர் அங்கீகாரம் வழங்கினார். இச்செயற்றிட்டத்தின் நோக்கமாவது, சிறியளவிலான மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் கடற்றொழிலுக்கான தொடர்ச்சியான பங்களிப்பை அதிகரிப்பதும், அவர்களது மீன் அறுவடையை அதிகரிப்பதும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுமாகும். இந்த முயற்சியினூடாக உள்நாட்டு மீனவ சமூகத்திற்கு நிலைபேறான மற்றும் சௌபாக்கியமான எதிர்காலம் எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்த தெப்பங்கள் சீ-நோர் அறக்கட்டளை **(Cey- Nor Foundation)** மூலம் உற்பத்தி செய்யப்பட்டன.2024.01.26 ஆம் திகதி இத்தெப்பங்கள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இனங்காணப்பட்டுள்ள மற்றுமொரு செயற்றிட்டமான லுனாவ குடாவை அண்மித்த இறங்குதுறை / அலைதாங்கி புனரமைப்புத் திட்டமானது தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.இத்திட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.இப்பணியை மேற்கொள்வதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக அத்திணைக்களத்திற்கு ரூ.**44,762,707.50** ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அதனுடன் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜூன் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டதுடன் செயற்றிட்டம் தொடர்பான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. அலைதாங்கியின் கட்டமைப்பு ஒருமைப்பாடு மற்றும் மீள்தன்மையை அதிகரித்தல் மற்றும் கடல் நீரோட்டங்கள் மற்றும் பலத்த அலைகளை தாங்குதல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக இறங்குதுறையின் பாதுகாப்பையும் அணுகலையும் மேம்படுத்துதல் என்பன இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

அத்துடன் இந்த எஞ்சிய 140 மில்லியன் ரூபாய் நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளவுள்ள புதிய செயற்றிட்டங்கள் தற்போது இனங்காணப்பட்டுள்ளன.

**2021 மே மாதம் 21 ஆம் திகதி ஏற்பட்ட MV X Press Pearl சரக்குக் கப்பல் தீப்பிடித்தமை காரணமாக மீன்பிடித்துறைக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்**

இந்தியாவின் ஹசிரா துறைமுகத்திலிருந்து 25 மெட்ரிக் தொன் நைத்திரிக் அமிலம், வேறு இரசாயணப் பதார்த்தங்கள், அழகுசாதனப் பொருட்கள், 278 மெட்ரிக் தொன் பங்கர் ஒயில் மற்றும் 50 மெட்ரிக் தொன் கடல் வாயு எண்ணெயுடன் 1,486 கொள்கலன்களை கொண்டு சென்ற சிங்கப்பூர் கொடியுடனான **MV Xpress Pearl** சரக்குக் கப்பல் 2021 மே மாதம் 21 ஆம் திகதி இலங்கைக் கரைக்கு 9.5 கிலோமீட்டர் அப்பால் நங்கூரமிட்டிருந்த போது தீப்பற்றியது. ஆதன் மூலம்

பிளாஸ்டிக் துண்டுகள், எண்ணெய் மற்றும் இரசாயணப் பதார்த்தங்கள் கசிவடைந்தமை காரணமாக நாட்டின் மேற்குக் கரையோர மீன்பிடிக் கைத்தொழிலிற்கு குறிப்பிடத்தக்க பொருளாதார பாதிப்பு ஏற்பட்டது.களுத்துறை தொடக்கம் நீர்கொழும்பு வரையான கடலோரப் பகுதியில் எண்ணெய்,இரசாயணப் பதார்த்தங்கள் மற்றும் எரிந்த பொருட்கள் குறிப்பாக பிளாஸ்டிக் துண்டுகளால் கரையோரம் மாசடைந்திருத்தது அவதானிக்கப்பட்டது. பிளாஸ்டிக் துண்டுகள், எண்ணெய் மற்றும் அரசாயணங்களின் கசிவினால் கடலோர மீன்பிடிக் கைத்தொழிலிற்கும் சமுத்திர சூழற்றொகுதிகளுக்கும் அதிக எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தப்பட்டது. இவ்வனர்த்தமானது பவளப்பாறைகள், கடற்பாசி, மீன் வாழிடங்கள் ஆகிய முழு சூழற்றொகுதியையும் பாதிக்கும் என நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டது.ஆகவே **MV Xpress Pearl** கப்பலின் பாதிப்பானது பரந்ததாக இருப்பதுடன் குறுகிய கால, நடுத்தரக் கால மற்றும் நீண்ட கால பாதிப்புகளை ஏற்படுத்த இடமுள்ளது. இலங்கையின் சுற்றுச்சூழல்,சமூக மற்றும் பொருளாதார மற்றம் சுகாதாரத் துறைகளில் ஏற்படக்கூடிய சேதத்தின் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கும் மீனவர்கள் மற்றும் கடலுணவு நுகர்வோரை பாதுகாப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதன்படி நீர்கொழும்பு, களுத்துறை மற்றும் கொழும்பு கடற்றொழில் மாவட்டங்களில் மீன்பிடித் துறைக்கான உடனடி பாதக விளைவுகளை குறைப்பதற்காக மீன்பிடி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. 2021-05-21 ஆம் திகதி தற்காலிக மீன் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அது நாரா நிறுவனத்தின் அறிவியல் பரிந்துரைகளினடிப்படையில் 2022-06-05 வரை அமுலாக்கப்பட்டது.

